புதுச்சேரி அரசு
அறிவியல் தொழில்நுட்பம், மற்றும் சுற்றுச்சூழல் துறை
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்
செய்திக்குறிப்பு

காற்றில் தூய்மை

வாழ்வில் மேன்மை

# "புகை நமக்குப் பகை"

பொதுமக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளுக்கு முதல் நாள் நாம் "போகிப் பண்டிகை" கொண்டாடுகிறோம். இந்நாளில் சில பழைய பொருட்களை எரிப்பதென்பது நம்மிடையே காலந்தொட்டு வரும் ஒரு வழக்கமாகும். ஆனால், போகியன்று இன்றைய சூழ்நிலையில் மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் டயர், ரப்பர், பிளாஸ்டிக் போன்ற பொருட்களையும் எரிப்பதால் நச்சுப் புகைமூட்டம் ஏற்பட்டு மக்களுக்கு சுவாச நோய்கள், இருமல் மற்றும் நுரையீரல், கண், மூக்கு, எரிச்சல் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் நச்சுக்காற்றாலும், கரிப்புகையாலும் காற்று மாசுபட்டு சுற்றுச்சூழல் சீர்கேடு அடைகிறது. பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதனால் புற்றுநோய் விளைவிக்கக்கூடிய டை ஆக்ஸின் மற்றும் பியுரான் என்கின்ற நச்சுக் காற்று வெளிப்பட வாய்ப்பு உள்ளது.

எனவே பொதுமக்கள் போகி பண்டிகையன்று, டயர், ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள், தெர்மோகால், செயற்கை இழைத்துணி போன்ற பொருட்களை எரிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பொங்கல் திருநாளை மிக்க மகிழ்ச்சியுடனும் மாசற்ற சுற்று சூழலுடனும் கொண்டாட எல்லா பொதுமக்களின் ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்